பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 679 **நாள்: 15.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 3,11,285 தெரு மின் விளக்குகள் 100 சதவீதம் ஒளிர்வதை உறுதி செய்யும் வகையில் நேற்று (14.11.2026) இரவு மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள், தெருக்கள், மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதிகளில், மயான பூமிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மின் விளக்குகளும் உயர் கோபுர மின் விளக்குகளும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 3,11,285 மின் விளக்குகள் அனைத்தும் 100 சதவீதம் ஒளிர்வதை உறுதி செய்திடும் வகையில், அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்களால் உத்தரவிடப்பட்டது. கள ஆய்வு மேற்கொள்ளும் நடவடிக்கையாக மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மற்றும் இணை ஆணையாளர் (பணிகள்) அண்ணா நகர் மண்டலத்தில் உள்ள மின்விளக்குகளில் எரியாத மின் விளக்குகள் குறித்த ஆய்வினை மேற்கொண்டனர்.

மேலும், மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் இணை ஆணையாளர் (கல்வி), மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் துணை ஆணையாளர் (சுகாதாரம்), தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட ப0குதிகளில் இணை ஆணையாளர் (பணிகள்) ஆகியோர் வட்டார பொறுப்பு அலுவலர்களும், 1 முதல் 15 மண்டலங்களுக்கும் பொறுப்பு அலுவலர்களாக உயர் அலுவலர்களும் நியமிக்கப்பட்டு நேற்று 14.11.2026 இரவு முழுவதும் 100 சதவீதம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த கள ஆய்வில் மொத்தமுள்ள 3,11,285 தெரு மின் விளக்குகளில் 1,610 தெரு மின் விளக்குகள் ஏரியாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இவற்றில், மழைநீர் வடிகால் பணி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பணி, சென்னை மாநகராட்சி குடிநீர் மற்றும் கழிவு வாரியப் பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் 579 தெரு மின் விளக்குகளும், புதை மின்வட

பழுதினால் 182 தெரு மின் விளக்குகளும், 849 எண்ணிக்கையிலான எல்இடி (LED) மின் விளக்குகள் ஏரியாமல் இருப்பது கண்டறியப்பட்டது. 849 எண்ணிக்கையிலான எரியாத மின் விளக்குகளை 24 மணி நேரத்திற்குள்ளும் 182 எண்ணிக்கையிலான புதை மின்வட பழுதுகளை 48 மணி நேரத்திற்குள் சரி செய்து எரிய வைக்கப்படும்.

மேலும், மாநகராட்சி ஆணையர் அவர்கள் உத்தரவின்படி, மரக்கிளைகளால் விளக்குகளின் வெளிச்சம் பாதிக்கப்படும் இடங்கள் கண்டறிந்து மரக்கிளைகள் வாரந்தோறும் அகற்றி தெரு மின் விளக்குகள் நன்கு ஒளிர்வதை உறுதி செய்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தெரு விளக்குகள் பழுது பார்க்கும் சமயத்திலும் மற்ற நேரத்திலும் மரக்கிளைகள் அகற்றப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மின் விளக்குகள் அனைத்தும் ஒளிர்வதைத் தொடர்ந்து கண்காணித்து அனைத்து மின் விளக்குகளும் 100 சதவீதம் ஒளிர்வதை உறுதி செய்திட மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களும், பெருநகர சென்னை சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒளிராத மின் விளக்குகள் மற்றும் இதர பழுதுகள் தொடர்பாக மாநகராட்சியின் 1913 என்கிற தொலைபேசியிலும், நம்ம சென்னை App மூலமும் தகவல் அளிக்கலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

Greater Chennai Corporation

Press Release

P.R No: 679 **Date: 15.11.2026**

Field inspection was conducted by Corporation officials last night (14.11.2026) to ensure that all 3,11,285 street lights within the Greater Chennai Corporation limits are 100% operational.

Within the limits of the Greater Chennai Corporation, street lights and high-mast lights are installed and maintained by the Corporation for public use across various locations, including roads, streets, flyovers, subways, parks, bus stands, Tamil Nadu Urban Habitat Development Board (TNUHDB) residential areas, and burial grounds.

To ensure that all 3,11,285 electric lights installed across the Greater Chennai Corporation limits are 100% functional, Corporation Commissioner Dr. G.S. Sameeran, I.A.S., ordered officials to carry out a field inspection. As part of this inspection drive, the Corporation Commissioner and the Joint Commissioner (Works) conducted an inspection of non-functional lights in the Anna Nagar zone.

Furthermore, as per the orders of the Corporation Commissioner, Zonal Nodal Officers were appointed—specifically the Joint Commissioner (Education) for the North Region, the Deputy Commissioner (Health) for the Central Region, and the Joint Commissioner (Works) for the South Region—along with senior officials designated as in-charge officers for Zones 1 to 15. A 100% field inspection was carried out throughout last night (14.11.2026).

During this field inspection, out of the total 3,11,285 street lights, 1,610 street lights were found to be non-functional. Among these:

- **579 street lights** were affected in areas where stormwater drain works, Chennai Metro Rail Limited (CMRL) works, and Chennai Metropolitan Water Supply and Sewerage Board (CMWSSB) works are underway.
- **182 street lights** were non-functional due to underground cable faults.
- **849 LED street lights** were found to be non-functional.

The 849 non-functional LED lights will be repaired and lit within 24 hours, and the 182 underground cable faults will be rectified within 48 hours.

Additionally, as per the Corporation Commissioner's instructions, orders have been issued to identify locations where tree branches obstruct the illumination of street lights and to prune them on a weekly basis to ensure bright lighting. Based on this, tree branches are being removed both during street light repair works and at other times.

The Corporation Commissioner has instructed officials to continuously monitor the functioning of all electric lights across the Greater Chennai Corporation limits to ensure they remain 100% operational.

The public is also requested to report non-functional street lights and other electrical faults within the Greater Chennai Corporation limits by calling the Corporation's helpline at 1913 or through the Namma Chennai App.

Issued by: Joint Director / Public Relations Officer,
Greater Chennai Corporation.